REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: பங்குனி 16உ செவ்வாய் (29—3—55) ★ ★ வெளியீடு: பங்குனி 17உ புதன் (30—3—55) [இதழ் 245

## மேற்கு பாகிஸ்தான் முதல் அமைச்சராக டாக்டர் கான் சாகிப் நியமனம்?

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரலின் பிரகடனப்படி ஒரே மாநிலமாக வரும் மே மாதம் முதல் இணையவிருக்கும் மேற்கு பாகிஸ்தான் மாநிலத்தின் முதல் முதன்மந்திரியாக இப்போது பாகிஸ்தானிய மந்திரிசபையில் செய்திப் போக்குவரத்து மந்திரியாக இருக்கும் டாக்டர் கான் சாகிப் நியமிக்கப்படக்கூடுமாம்.

அவருடன் 15 மந்திரிகள் இருப்பர் என்றும், இப்போதுள்ள எல்லா மாநிலங்களுக்கும் அந்த மந்திரிசபையில் பிரதிநிதித்துவம் இருக்கும் என்றும் தெரியவருகிறது

புது மந்திரிசபை எப்ரல் 15-ந் தேதி பதவியேற்குமாம்.

# திரு-தமிழக பிரச்சினையில் நேருவின் தலையீடு

## வழக்குகளைத் திரும்பப்பெறும் யோசனையை நிராகரித்தாராம்!

### பட்டம் தாணு சட்ட சபையில் அம்பலப்படுத்துகிறார்

திருவனந்தபுரம், மார்ச் 28—

கடந்த 1954 ஆகஸ்டு 11-ந் தேதியன்று, திரு—தமிழ்ப் பகுதிகளை தாய்த் தமிழகத்துடன் இணைக்க வேண்டும் என்று கோரி நடத்திய விடுதலை தினக் கிளர்ச்சிகளையொட்டி திரு—தமிழக காங்கிரஸ் தலைவர்கள், தோழர்கள் மீது தொடுத்திருந்த வழக்குகளை, 'திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்,' என்று பட்டம் தாணு கூறிய யோசனைகளை நிராகரித்தவர் இந்தியப் பிரதமர் பண்டித நேருதான் என்பது, திரு—கோச்சி சட்ட சபையில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

நேருவின் இந்தத் 'தலையீடு' குறித்து, பட்டம் தாணுபிள்ளையே சபையில் பேசியிருக்கிறார்.

டி. பி. சீதாராம் என்ற காங்கிரஸ் உறுப்பினர் கேட்டதின் பேரிலேயே பட்டம் தாணுபிள்ளை இந்த விஷயத்தை அம்பலம் செய்தாராம்.

திரு–தமிழக காங்கிரஸ்காரர்கள் புரிந்த குற்றங்களின் கடுமையைக் கருத்தில் கொண்டு, அவர்கள் மீதுள்ள வழக்குகளை திரும்பப்பெறக் கூடாது என, பண்டிதர் கருதியதாகவும் பட்டம் தாணு கூறியிருக்கிறார்.

**எனக்கும் தெரியுமே!**

விவாதத்திற்குப் பதிலளித்த முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்தமேனன், தனக்கும் நேருவின் தலையீடு பற்றிய தகை தெரியுமென்று கூறியிருக்கிறார்

"தென் திருவாங்கூரில் போலீசார் மேற்கொண்ட நடவடிக்கைகளை காங்கிரஸ் எதிர்த்தால், போலீசாரைத் தண்டிக்கட்டும்; ஆனால், எப்படி ஒரு பொறுப்புள்ள அரசாங்கம் தனது நடவடிக்கைகளையே இல்லையென்று கூறிவிட முடியும்? தென் திருவாங்கூர் சம்பவங்களுக்கு காங்கிரஸ் கட்சியும் தான் பொறுப்பாளி; ஏனெனில் அப்போதிருந்த ம. சோ. கட்சி அரசாங்கத்தை காங்கிரஸ் ஆதரித்து வந்தது; தமிழ்நாடு காங்கிரஸ்காரர்கள் மீதிருந்த வழக்குகளைத் திரும்பப் பெறுவதை நான் எதிர்க்கவில்லை; நான் தமிழர்களை வெறுப்பவனுமல்ல,"

என்று, பட்டம் தாணு பேச்சையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இப்போதுள்ள காங்கிரஸ் மந்திரி சபை, 'லஞ்சம்,' கொடுத்து அமைக்கப்பட்டிருக்கிறது," என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த பனம்பள்ளி கோவிந்தமேனன், திரு—தமிழக காங்கிரஸ், தி. கொ. காங்கிரஸ் கட்சியுடன் நிபந்தனையின்றி இணைந்துள்ளது.


"எப்படி, 'எல்லாம் வல்ல' காலம், இடதுசாரிகளின் ஐக்கிய முன்னணியைப் பிரித்து, 4 கட்சிகளாகச் சிதறச் செய்ததோ, அப்படித்தான் அதே 'எல்லாம் வல்ல' காலம் திரு—தமிழ் நாடு காங்கிரசையும் எங்களுடன் சேர்த்தது," என்று குறிப்பிட்டார்.

### எல்லாம் அணுவின் செயலாம்!

"மீண்டும் உலக யுத்தம் வந்தால், 'அதிரடிப் போர்' முறையில், அணு, நீர்வளிக் குண்டுகள் பிரயோகிக்கப்படும்; அதன் விளைவாக பகை நாடுகள் யாவும், இரண்டு அல்லது மூன்றே வாரங்களில் தோல்வியடைந்து விடும்; அப்படி நடைபெறாவிட்டால், யுத்தம் உலகமெங்கும் பரவி, பல ஆண்டுகளாக நடைபெறும்."

இவ்வாறு பிரிட்டனின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் லார்ட் அலெக்சாண்டர் கூறியிருக்கிறார்.

## 'ஏன் இந்தப் பாரபட்சம்?'




வடக்கும் தெற்கும்: 'சுதேசமித்திரன்' தரும் விளக்கம்!

—படம் அன்பளிப்பு: 'சுதேசமித்திரன்'

# எப்படிப் பிறந்தது இந்த இழி நிலை?

## வடக்கே வளர்ந்துள்ள இரு புதிய 'நாகரீகங்கள்!'

### பம்பாய், கல்கத்தா மக்கள் மனப்போக்கு பற்றி காங்கிரஸ் தலைவர் தேபர்

பம்பாய், மார்ச் 27—

"உடல் உழைப்பில் மக்கள் கொண்டுள்ள வெறுப்பு, இந்தியாவின் இரு பிரதான நகரங்களான கல்கத்தாவிலும், பம்பாயிலும் இரு 'புதிய நாகரீகங்களைத் தோற்றுவித்துள்ளது,"

என்று, காங்கிரஸ் தலைவர் யூ. என் தேபர் கூறியிருக்கிறார்.

"கல்கத்தாவில் 'பாபு நாகரீக'மும், பம்பாயில் 'சூதாட்ட நாகரீக'மும் பிறந்துள்ளன;"

"கல்கத்தாவில் குமாஸ்தா வேலைகளுக்கு மக்கள் அதிக ஆசைப்

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★ ★★★★★ ★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்—அறிக்கை:

## புதுவை — காரைக்கால் கிளைகள்

புதுவை வட்டாரத்தில் அமைக்கப்படும் சிற்றூர்—பேரூர்—நகரக் கிளைகள் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவைகளாகக் கருதப்பட வேண்டும். மாவட்டப் பிரதிநிதிகளை தெ ஆ. மாவட்டக் கிளைக்கு அனுப்ப வேண்டும்.

காரைக்கால் வட்டாரத்தில் அமைக்கப்படும் கிளைகள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவைகளாகக் கருதப்பட வேண்டும். அந்தக் கிளைகள் மாவட்டப் பிரதிநிதிகளை தஞ்சை மாவட்டக் கிளைக்கு அனுப்ப வேண்டும்.

"அறிவகம்" சென்னை. 27—3—55

**சி. என். அண்ணதுரை**
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★★★★★ ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

## ஐதராபாத் மாநிலத்தில் 23,000 'அடிமை'கள்!

### கூலியும் சமத்துவ உரிமையும் தர மறுக்கும் பெருந்தனவான்கள்

ஐதராபாத், மார்ச் 29—

ஐதராபாத் ராஜாக்கள், ஜாகீர்தார்கள், மற்றும் பெருந்தனக்காரர்கள் ஆகியோரிடம் வேலை செய்யும் பதிவு செய்யப்பட்ட (!) 'அடிமை'களாக உள்ள 23,000 பேர்கள் பற்றிய பிரச்சினை, ஐதராபாத் அரசாங்கத்தை எதிர்நோக்கியிருக்கிறதாம்!

அந்த 23,000 பேரையும் அடிமை கொண்டுள்ள ஜாகீர்தார்களும், ராஜாக்களும், அந்த அடிமைப்பட்டோருக்குக் கூலி எதும் கொடுக்க மறுத்துவருவதுடன், அவர்களுக்கு உரிய சமத்துவ உரிமையையும் மறுத்துவருகிறார்களாம்.

இந்த 'அடிமை'கள் 'பார்வாதா' என்றும் அழைக்கப்படுகின்றனராம்

தக்காண நிலப் பிரபுத்துவ அமைப்பின் எச்சம்தான் இந்தப் 'பார்வாதா' முறை என்று கூறப்படுகிறது.

ஜாகீர்களின் சீர்குலைந்த பொருளாதார நிலை, தொடர்ந்த பஞ்ச நிலை, மிதமிஞ்சிய எழ்மை நிலை ஆகியவற்றால் இந்த 'பார்வாதா' முறை, நாட்டின் இந்தப் பகுதியில் செழித்து வளர்ந்தது என்றும் கூறப்படுகிறது.

பிரதமர் நேரு இவ்வாண்டு ஜூன் திங்களில் ரஷ்யா செல்லவிருக்கிறாராம். அங்கு இரண்டு வார காலம் தங்குவார்.

## 'அமிர்தம்' எது?

ஆஸ்திரேலியாவின் பிரபல அணு, பௌதீக விஞ்ஞானியான ஒலிபாண்டிடம், சர். சி. வி. இராமன் அவர்கள் 'அமிர்தம் எது'? என்று கேட்டபோது, அவர் ஒன்றும் தெரியாமல் திகைத்துவிட்டாராம்! சர். சி. வி. இராமன் உடனே 'சாதாரண—ஆனால் சுத்தமான, தெளிவான தண்ணீரே அந்த அமிர்தம்' என்று கூறிவிட்டு, சென்ற 10 ஆண்டுகளாக யாருமே இதை எதிர்க்கவில்லையென்றும், மாறாக அதற்கு ஆதரவுதான் வலுத்து வருகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு

சென்னை 29—3—'55 செவ்வாய்

# முழக்கம்—டில்லியில்!

நாடு அறிந்துகொண்டு விட்டது — 'நயவஞ்சகம்' என்பதன் மாற்றுப் பெயர்தான், 'ஐந்தாண்டுத் திட்டம்' என்ற பேருண்மையை!

'ஓரவஞ்சனை காட்டப்பட்டிருக்கிறது' என்பதை, மக்கள்—தென்னாட்டவர் தெரிந்து கொண்டு விட்டனர்.

'ஐந்தாண்டுத் திட்டம் திட்டிநிறைவேற்றியது, வடநாட்டுக்கு வாழ்வும் வளமும் அளிக்க மட்டுமே பயன்பட்டது—தென்னாட்டுக்கு எலும்புத் துண்டுகள் சிலவே வீசி எறியப்பட்டன — அதற்கு வாலைக் குழைக்கும் போக்கினர் இருக்கின்றனர் என்ற துணிவுடன்'—என்ற சோகக் காதையை நாடு கேட்டது—கடுங்கோபம் கொண்டது—கண்டனக் குரலை எழுப்பிற்று ....பிறகு......'என்னசெய்வது' என்று ஏங்குகிறது — 'இந்த சதிச் செயலைச் சாய்த்திட மார்க்கம் என்ன?' என்றுகேட்கிறது.

பாலைவனங்களைப் பச்சைக் கிளிகள் கொஞ்சிடும் பழமுதிர்ச் சோலைகளாக்குகிறார்கள்!

கட்டாந்தரைகளெல்லாம் — கரும்புத் தோட்டங்களாகின்றன!

வெள்ளக் காடாகச் சில திங்களும், சதுப்பு நிலமாகச் சில திங்களும், வெடித்துக் கிடக்கும் நிலையில் சில திங்களும்—இப்படிக் கோலம் காட்டும் பெருவெளிகளிலெல்லாம் இனி, பருத்தியோ, கோதுமையோ, விளையப்போகிறது—திருத்தம் கிடைத்துவிட்டது.

மலை போன்ற அணைகள்! கடல் போன்ற நீர்த் தேக்கங்கள்! வாய்க்கால் — காவிரி போல! எங்கும் பசுமை! எங்கணும் புதுமை!

கண்ணை மருட்டி வந்த பாழ்வெளிகளெல்லாம் புத்தம் புதுக் கோலம் பூண்டு, கவிவாணர்களை, 'வண்ணம் கண்டு மகிழ்ந்திட வாரீர், வாரீர்' என்று கூவி அழைக்கிறது!

குன்றுகளைக்குடைந்தெடுத்து, வளம் பாய்ந்து செல்லும் வழி அமைக்கிறார்கள்!

நீரைத் துள்ளிவிழச் செய்து, அதிலிருந்து மின்சாரம் எடுக்கிறார்கள்—அதைக் கொண்டு, பெரும் பெரும் இயந்திரங்களை ஓட்டுகிறார்கள்; புதுப் புது தொழிற்சாலைகளை அமைக்கிறார்கள்!

'ஆஹா!'—என்கிறான், அமெரிக்க நாட்டு நிபுணன், அகமகிழ்ந்து!

'பலே! பலே!'—என்று கூறிப் பரவசப்பட்டார், மார்ஷல் டிட்டோ!

'எதிர்பார்த்ததைவிடப் பலன் அதிகம்,'—என்று புகழ்கிறான், பிரிட்டிஷ் நிபுணன்!

உலகம்வியக்கிறது—ஊராள்வோரின் திறத்தைப் பாராட்டுகிறது!

எல்லாம், எங்கே? வடநாட்டில்! எதன் பயனாக? ஐந்தாண்டுத் திட்டத்தினால் கிடைத்த பெரும்பயன்!

இங்கு?—இங்கா! இங்கு அதைப் பற்றிக் 'கனம்கள்' பேசுகிறார்கள்— அவ்வளவுதான்!

★

குஞ்சாலாடு, பதிர்பேணி, பாதம் அல்வா, குலோப்ஜான், பர்பி! — இவ்வளவும், இது போல் வேறு பலவும் மேஜை மீது!

இந்தச் சுவை தரும் 'பலகாரங்களை'ச் சாப்பிட ஒருவர் அமர்ந்திருக்கிறார்.

இவ்வளவு 'விருந்து' இருக்கும்போது, வேறோர் இனிப்புப் பண்டத்தைத் தட்டில் வைத்துக்கொண்டு, 'இதையும் ஏற்றுக்கொள்க!' என்று ஒரு பணியாள் கேட்கிறார்.

அருகாமையிலேயே வேறோர் ஆசாமி அமர்ந்திருக்கிறார்—சாப்பிடத்தான் — பசியோடு இருக்கிறார்!

மேஜை இருக்கிறது—தட்டு கூட இருக்கிறது—ஆனால், காலியாக! பண்டம் ஏதும் இல்லை!

இனிப்புப் பண்டத்தைத் தட்டு நிறைய வைத்துக்கொண்டிருப்பவரோ, இந்தப் பக்கம் திரும்பியும் பார்க்கவில்லை!

இது, ஐந்தாண்டுத் திட்டம் பற்றி, 'சுதேசமித்திரன்' வெளியிட்டுள்ள படம்!

ஆமாம்; 'சுதேசமித்திரனே' தான்!

'சூடு, சொரணை, ரோஷம், மானம், கோபம், கொதிப்பு, இல்லையா, இல்லையா'—என்று கேட்டனர் நமது தோழர்கள் —இந்தத் திங்கள் இருபதாம் நாள், நாடெங்கும்—ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாளில்!

'சுதேசமித்திரன்,' ஊரூராக அலைந்து, அடிவயிறு வலிக்க வலிக்கப் பேசி, ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டிக்கவில்லை —அவ்வளவு சிரமம் எடுத்துக் கொள்ளுமா! ஒரு கேலிச் சித்திரம் வெளியிட்டு, நிலைமையைத் தெரிவிக்கிறது, நாட்டு மக்களுக்கு!

தாமோதர் அணைக்கட்டு, ஹிராகுட் அணைக்கட்டு, பக்ரா தேக்கம், சிந்திரி உரத் தொழிற்சாலை, சித்தரஞ்சன்—தொழிற்சாலை—இப்படிப் பல, பலப் பல!—முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் விளைவு!!

செலவு, சாமானியமாகவா செய்தார்கள்? நாம்தான் பஞ்சம், பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், அகவிலை போன்றவைகளால் கொட்டப்பட்டு வதைபடுகிறோம்; ஆனால், முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே செலவிட்ட தொகையின் அளவை, கேட்டாலே பிரமித்துப் போகிறோம் —2,000 கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டிருக்கிறார்கள்.

இவ்வளவு செலவு செய்தும், 'சுதேசமித்திரன்' கேலிச் சித்திரத்தின்படி பார்க்கும்போது; தென்னாட்டவனுடைய உணவுத் தட்டு, 'காலி'யாக இருக்கிறது.

இந்தக் கேலிச் சித்திரம், 'காங்கிரஸ் வட்டாரத்திலேயே, ஐந்தாண்டுத் திட்டத்திலே நடைபெற்ற 'ஓரவஞ்சனை'—மனவருத்தத்தைத் தந்திருக்கிறது,' என்பதை எடுத்துக் காட்டுகிறது.

20-ந் தேதி தி. மு. க. நடத்திய கண்டன நாள், காங்கிரஸ் வட்டாரத்திலே கூட ஓரளவு விழிப்பையும், எழுச்சியையும் ஏற்படுத்தி விட்டது.

கண்டனக் கூட்டங்களிலே கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள், நடைபெற்ற அக்கிரமத்தைப்புரிந்துகொண்டு மனம் வெதும்பினர்.

"இந்தியா-இந்தியா என்று மயக்கமொழி பேசுவதெல்லாம் இப்படி, தென்னாட்டின் வயிற்றில் அடிக்கத்தானா?"—என்று கேட்டனர்.

"அணைகளும் ஆலைகளும், தேக்கங்களும் தொழிற்சாலைகளும், விஞ்ஞானக்கூடங்களும், தளவாடத் தொழில் நிலையங்களும், ஆராய்ச்சிக் கூடங்களும் அங்கே!—பனை வெல்லம காய்ச்சுவதும், கைக் குத்தல் அரிசியும், பானை செய்வதும், கூடை முடைவதும் இங்கே! இதுதானா உங்கள் சுயராஜ்ய நீதி?"—என்று இடித்துக் கேட்கிறார்கள் தெளிவு பெற்ற மக்கள்!

"ஐந்தாண்டுத் திட்டம், வடநாட்டை சீமையாக்கிவிட்டது-தென்னாட்டை விவசாய விசாரக் காடாக்கிவிட்டது'—என்பதை உணர்ந்துகொண்ட மக்கள், இதற்கெல்லாம் ஓரே பரிகாரம், 'திராவிட நாடு திராவிடருக்கு,' என்ற திட்டம் தான் என்பதை வலியுறுத்தத் தொடங்கிவிட்டனர்.

காங்கிரஸ் வட்டாரத்திலேயே ஓரளவுக்கு விழிப்புணர்ச்சியும், மன எழுச்சியும் ஏற்படச் செய்வதற்கும, பொதுமக்கள் மனதிலே தெளிவும் உறுதியும் எழச் செய்வதற்கும் பயன்பட்டிருக்கிறது கண்டன நாள் கூட்டம்!

'திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும்,' என்ற திட்டத்தைப் பொதுமக்கள் தீவிரமாகவும், உடனடியாகவும் கவனிக்க வேண்டிய ஒன்றாகும்—என்று ஏற்றுக்கொள்ள, இந்த நாள் பெரிதும் உதவி இருக்கிறது.

ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய கண்டனம், இப்போது, எங்கும் கிளம்பிவிட்டது.

வடநாட்டார், தங்கள் சூழ்ச்சித் திட்டம் வெட்ட வெளிச்சமாகிவருவதை உணர்ந்து வருகிறார்கள்.

'அகில இந்தியா' பேசும் தலைவர்களின் மனதிலே அச்சம் எழத் தொடங்கிவிட்டது.

'யாரும் கண்டுபிடிக்க மாட்டார்கள்-ஓரவஞ்சனை வெளியே தெரியாது— என்று எண்ணிக் கொண்டிருந்தவர்கள், நாடே கண்டன நாள் நடத்துவது கண்டு, 'நிலைமை முற்றுகிறது,' என்று அஞ்சுகிறார்கள்.

அந்த அச்சத்தைப் பன்மடங்கு அதிகப்படுத்தும் முறையிலே, ஆற்றலுடன் போர்ப் பரணி பாடினார்கள், **அன்னி மாஸ்கரேன்** எனும் அம்மையார் டெல்லி பாராளுமன்றத்தில்!

திருவிதாங்கூர் பகுதியிலிருந்து சென்றுள்ள அந்த அம்மையார், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தெற்கு புறக்கணிக்கப்பட்டது பற்றி வன்மையாகக் கண்டித்துவிட்டு, "இதே போக்கிலே சர்க்கார் செல்லுமானால், **வடக்கிலிருந்து, தெற்கு பிரியத்தான்** வேண்டிவரும்," என்று எச்சரித்திருக்கிறார்.

அம்மையாரின் அஞ்சா நெஞ்சு கண்டு, 'வாய் மூடிக்கிடக்கும்' ஆடவர்கள்கூட, இனி ஆற்றலைக் காட்ட முன்வருவர் என்று நம்புகிறோம்.

'திராவிட நாடு திராவிடருக்கே!' — என்ற முழக்கம், டில்லியில் கேட்கத் தொடங்கி விட்டது.

முதல் முழக்கம், சிலப்பதிகாரச் செந்தமிழ் நாட்டின் பெண்மணி மூலம் கிளம்பிவிட்டது. மகிழ்ச்சி! பட்டற்ற மகிழ்ச்சி!!

முழக்கம்—முரசு—பரணி—வாகை! ஆம்! ஆம! ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள் பெற்றுத் தந்த பேரார்வம், நமக்கு, எதிர்காலக் காட்சிகளை மனக் கண்ணால் காண உதவுகிறது.

வளர்க விடுதலை உணர்வு! வாழ்க திராவிட நாடு!

# ஆதாரக் கல்வியை புகுத்துவதில் உள்ள ஆபத்துக்கள்!

## குழந்தைகளை குமாஸ்தாக்களாக்கக் கூடாது என்றால், கூலிகளாகவுமாக்கக் கூடாது

### சென்னை கல்விக் குழுவிடம் தென்னாட்டு மக்கள்சபை உறுப்பினர்கள் எச்சரிக்கை

புதுடில்லி, மார்ச் 25—

தென்னிந்தியாவின் கல்வித் திட்டங்களில் செய்யப்படுகிற கடுமையான மாற்றங்களை, தென்னிந்திய மக்கள் சபை உறுப்பினர்கள் வன்மையாகக் கண்டிப்பவர்களாக இருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

ஆதாரக் கல்வியை 5 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு போதிப்பது பற்றிய பிரச்சினையில் அவர்களிடை பலத்த கருத்து வேறுபாடு நிலவியது

ஆதாரக் கல்வியை ஆதரிக்கும் உறுப்பினர்கள், "குழந்தைகளை வெறும் 'குமாஸ்தாக்க'ளாக ஆக்கிவிடக் கூடாது." என்றனர்.

அதற்குப் பதில் தரும் வகையில், ஆதாரக் கல்வியை எதிர்ப்பவர்கள், "அப்படியானால் குழந்தைகளை வெறும் 'கூலிகளா'கவும் தயாரித்துவிடக் கூடாது," என்று சுடச்சுடக் கூறியிருக்கின்றனர்.

சென்னை மாநில ஆரம்பக் கல்விக் குழு உறுப்பினர்கள் சென்னையைச் சேர்ந்த மக்கள் சபை உறுப்பினர்களை நேற்று சந்தித்தனர்

சில தமிழ்நாட்டு உறுப்பினர்கள் ஆதாரக் கல்வியை ஆதரித்தபோதிலுங்கூட, தோழர்கள் திருக்குறள் வி. முனுசாமி, எ. ஜெயராமன், சங்கரபாண்டியன், மற்றும் பி. டி. தாணுப் பிள்ளை போன்றவர்கள், "பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆதாரக் கல்வியைப் புகுத்துவதை அடியோடு ஒழிக்க வேண்டும்," என்று வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர்.

அநேக இடங்களில் இளஞ்சிறார்களுக்கு ஆதாரக் கல்வி போதிக்க முயற்சிக்கப்பட்டதில் தோல்வியே ஏற்பட்டிருக்கிறது என்ற காரணத்தையும், மேலும் பல மேற்கோள்களைக் காட்டியும் ஆதாரக் கல்வித் திட்டத்தை எதிர்த்து அந்த உறுப்பினர்கள் வாதாடியிருக்கின்றனர்

"மாறிக்கொண்டிருக்கிற பாடத் திட்டங்கள், பிரதேச மொழியில் பாடங்களைப் போதித்தல் ஆகிய பிரச்சினைகளால் ஏற்கனவே குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டிருக்கிறது;

"எனவே, இன்னும் 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு பொதுவாகவும், குறிப்பாக 5 முதல், 10 வயதுடையவர்களுக்கும் ஆதாரக் கல்வி போதிப்பதை பரீட்சித்துப் பார்ப்பதைக்கூட மேற்கொள்ளக்கூடாது," என்றும் அவர்கள் கருத்தறிவித்திருக்கின்றனர்.

"ஆதாரக் கல்வி தேவை என்ற பிரச்சாரம் புரிவோரே தங்கள் குழந்தைகளை, ஏதாவது ஆதாரப் பயிற்சி இல்லாத, 'கான்வெண்ட்' பள்ளிகளுக்கு அனுப்பிவருவதே பொது மக்களிடையே பரவி நிற்கும் ஆதாரக் கல்விக் கண்டனத்திற்குப் போதுமான எடுத்துக் காட்டாகும்," என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

"சென்னை புதிய கல்வித் திட்டத்தினால் குழந்தைகளுக்கு மனனஞ் செய்யும் பழக்கமே இல்லாது போய்விட்டது: எளிய கணிதம் கூட குழந்தைகட்குத் தெரியவில்லை," என்றும் அபிப்பிராயப்பட்டனர்.

"சமீப ஆண்டுகளில் சென்னையில் செய்யப்பட்ட 'பரிசோதனை'களின் விளைவாக, தென்னிந்தியர்களின் திறமை குறைந்திருப்பதுடன், தேசிய, சர்வ தேசிய உத்தியோகங்களுக்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும் குறைந்துவிட்டது;

"இதர மாநிலங்களிலும், தனியார் நிறுவனங்களிலும், சென்னை பட்டதாரிகளை விரும்பி உத்தியோகத்திற்கு வரவேற்கப்பட்ட நாட்கள் சென்றுவிட்டன; எனவே, இந்த நிலையில், தென்னிந்தியப் பள்ளிகளில் கல்விச் சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு, கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் ஆங்கிலம் புறக்கணிக்கப்பட்டால், கொஞ்ச காலத்தில் தேசிய, சர்வ தேசிய உத்தியோகங்களில், தென்னிந்தியர்கள் எங்கும் இருக்கவே மாட்டார்கள்," என்றும் அவர்கள் திட்டவட்டமாகக் கருத்தறிவித்திருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

## பம்பாய் கல்லூரிகளில்
# இந்தி மொழி!

"இவ்வாண்டு ஜூன் திங்கள் முதல், கல்லூரிகளிலெல்லாம் இந்தியை போதனு மொழியாக்குவதை அமுல் செய்வதுபற்றி சர்க்கார், இறுதியாக இன்னும் முடிவெடுக்கவில்லை,"

என்று, பம்பாய் சட்டசபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், மாநில கல்வி மந்திரி தினகர் ராவ் கூறியிருக்கிறார்.

இதை அமுல் நடத்த சர்க்கார் தயாராகவே இருப்பதாகவும், ஆனால் கல்லூரிகளின் போதனு மொழி பற்றிய முடிவு, பல்கலைக் கழகத்தால்தான் எடுக்கப்படவேண்டுமென்றும், அவ்வாறு, இந்தி மொழி போதனு மொழியாவதைப் பல்கலைக் கழகம் ஆட்சேபித்தால், அதுபற்றி வேறு ஏதாவது ஒரு வழி காண்பதை சர்க்கார் யோசிக்கும் என்றும் கூறியிருக்கிறார்.

---

இந்தியாவில், பல்வேறு மாநிலங்களில் மொத்தம் 1,55,234 கார்கள் தனியாருக்குச் சொந்தமாக இருந்துவருகின்றன.

# மாவட்ட நிர்வாக மொழியாக தமிழ் !

**பக்தவத்சலத்தின் மறுப்பு**

சென்னை, மார்ச் 26—

செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டத் தலைமைக் காரியாலயங்களில், ஆங்கிலத்திற்குப் பதில் தமிழ் மொழியையே நிர்வாக மொழியாக்க வேண்டுமென்பதுடன், சென்னை சர்க்கார் தலைமைக் காரியாலயத்துடன், அக்காரியாலயங்கள் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், திரு. கஜபதி நாயகர் அவர்கள் கொண்டு வந்த தனிநபர் தீர்மானத்தின் பேரில் சென்னை மேல் சட்ட சபையில் விவாதம் நடைபெற்றிருக்கிறது.

விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசுகையில் அமைச்சர் பக்தவத்சலம் கூறினார்:—

"சர்க்காரின் திட்டப்படி ஏற்கனவே உள்ள இடத்தில் தமிழை நிர்வாக மொழியாக்குவதைச் சரி செய்ய வேண்டும்; பின்னர், மற்ற மாவட்டங்களிலும் அதனைப் புகுத்தலாம்; ஆனால், சென்னை சர்க்கார் தலைமைக் காரியாலயத்தில் இப்போது இது அமுல் நடத்தப்படுவது உடனடி சாத்தியமானதல்ல; இங்கு இதை மேற்கொள்ளப் படு முன்னர், திருச்சி மாவட்டத்தில் சரிவர நடத்த முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படும்."

மேலும் அவர், திருச்சி மாவட்டத்தில் இம்முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்ட பின்னர், அதனை விரிவாக்குவது பற்றி ஆராயலாம் என்று கூறினார்.

பின்னர், இத்தீர்மானம் தோழர் கஜபதி நாயகர் அவர்களால் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

# மருத்துவக் கல்வி: - - சர்க்கார் விளக்கம்

சென்னை, மார்ச் 26—

"உடனடியாக மருத்துவக் கல்வியை விரிவுபடுத்துவதற்கான குறிப்பான திட்டமெதுவும் சர்க்காருக்குக் கிடையாது," என்று, அமைச்சர் ஏ. பி. ஷெட்டி சட்ட சபையில் தெரிவித்திருக்கிறார்.

காரைக்குடியில் மருத்துவக் கல்லூரி ஒன்றை நிறுவுவது சம்பந்தமாக டாக்டர் அழகப்பசெட்டியார் கொண்டுவந்துள்ள திட்டமொன்றை ஆராய்ந்த டாக்டர் ஏ இலட்சுமணசாமி முதலியார் குழு, தனது அறிக்கையை இப்போதுதான் சமர்ப்பித்துள்ளதென்றும், சர்க்கார் அதை இப்போது பரிசீலித்து வருவதாகவும் அவர் கூறினார்

மேலும் 50 மாணவர்களுக்குப் போதிக்கக் கூடிய ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்க, சுமார் ஒரு கோடி ரூபாய் செலவாகுமென்று கணக்கிடப்படுவதால், இது விஷயத்தில் அவசரப்பட்டு காரியங்களைச் செய்வதற்கில்லை என்றும் அவர் கூறினார்.

மேலும் அவர், மருத்துவக் கல்லூரி அமைக்க மத்திய சர்க்கார், இரண்டாவது அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பண உதவி தருவதானாலும், இது பற்றிக் குறிப்பாக எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும், டாக்டர் அழகப்பச் செட்டியார்கூட இக்கல்லூரியை அமைக்கக் கொடுக்கவிருக்கின்ற பண உதவியை இன்னும் திட்டமாகத் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

இறுதியில் அவர், காரைக்குடியில் ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவ போதுமான சூழ்நிலைகள் உள்ளன என்பதையும் அங்கீகரித்திருக்கிறார்.

# புத்துயிர் பெறுமா ?

சென்னை, மார்ச் 26—

எஞ்சினீயரிங் இலாகா அதிகாரிகளையும், தனிப்பட்ட பஸ் கம்பெனிகளைச் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கிய நிபுணர்கள் குழு ஒன்றை நியமித்து, நகர பஸ் போக்குவரத்து நிர்வாகத்தையும், பராமரிப்பையும், மற்றுமுள்ள இதர ஏற்பாடுகளையும் அபிவிருத்தி செய்வதற்கான வழி வகைகளைக் கண்டறிந்து கூறும்படி அக்குழுவினரிடம் கோரப் போவதாக சட்டசபையில், மாநில போக்குவரத்து அமைச்சர் பரமேசுவரன் கூறியுள்ளார்.

# தமிழகமெங்கும் ஐந்தாண்டுத் திட்ட கண்டன நாள்

பேரூர் பொதுக் குழுவின் தீர்மானப்படி, தமிழகமெங்கும் 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்', தி. மு. கழகத் தோழர்களால், பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தப்பட்டும், செயற்குழு கூடி கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டும் சிறப்புற கொண்டாடப்பட்டுள்ளது. விவரங்கள் சுருக்கிக் கீழே தரப்பட்டுள்ளது:—

### போளூர்

20—3—55 ஞாயிறு மாலை 6 மணியளவில், பழைய பஸ் நிலையத்தில் தோழர் சக்கரமல்லூர் வி. ஏ. நடராசன் தலைமையில், கூட்டம் நடைபெற்றது தோழியர் விருதம்பட்டு தேசீய மணியம்மையார், தோழர்கள் கருத்தோவியன், ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ ஆகியோர் பேசினர்.

தோழர் கோவிந்தசாமி அவர்கட்கு, பல சங்கங்கள், கழகங்கள் சார்பிலும், உள்ளூர் வன்னியகுல க்ஷத்திரிய சங்கத்தின் சார்பிலும், விவசாயிகள் சார்பிலும், மலர்மாலைகளும், கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன.

விவசாயிகள் சார்பில், செய்யாற்றில் அணைக்கட்டு ஒன்று கட்டி, போளூர் ஏரிக்குக் கால்வாய் வெட்ட வேண்டும் என்றும், போளூர் மலையில் விழும் மழைத் தண்ணீர் நகர வீதிகளை பாழ்படுத்துவதை நிறுத்த அந்த நீரை, அருகில் உள்ள கிராம ஏரிகளுக்குப் பாய்ச்சி உபயோகிக்க வேண்டும் என்றும் கோவிந்தசாமி அவர்களிடம் கோரப்பட்டது.

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக மந்திரி மாணிக்கவேலர் தேர்தல் காலத்தில் உறுதியளித்திருந்ததாயும், இன்று வரை எதும் செய்யப்படவில்லை என்றும், ஆகவே தோழர் கோவிந்தசாமி அவர்களாவது இக்கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்றும் விவசாயிகளால் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இறுதியாக தோழர் போளூர் கே. சுப்ரமணியம் அவர்கள் நன்றி நவில கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிவுற்றது.

### சந்தை புதுப்பாளையம்

24—3—55 மாலை 6 மணி அளவில் தி. மு கழக சார்பில், கூட்டம் நடைபெற்றது தோழர்கள் என். வி. நடராசன், ப. உ. சண்முகம், போளூர் கே சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

### கரியாபட்டணம்

20—3—55ல் நடைபெற்ற கழகப் பொதுக்குழுக் கூட்டத்தில், ஐந்தாண்டுத் திட்டக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சீர்காழி

23—3—55 மாலை 6½ மணிக்கு எஸ். ஆர். சி. திடலில் தி. மு கழகச் சார்பில் தோழர் என். இராமசாமி தலைமையில் நடைபெற்றது தோழர் என். வி. நடராசன் விரிவுரையாற்றினார்.

### கும்பகோணம்

24—3—55 மாலை 6 மணிக்கு நகர தி மு கழகச் சார்பில் ஜூப்ளி பார்க்கில் பொதுக்கூட்டம் தோழர் கே கே. நீலமேகம் தலைமையில் நடைபெற்றது. தலைவர் பேசிய பின்னர், தோழர் சி பி. சிற்றரசு நீண்டதோர் விரிவுரையாற்றினார்.

### சல்லிப்பட்டி

20—3—55-ல், தோழர் இரா முத்துசாமி தலைமையில், கழகக் கட்டிடத்தில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

### நரசிங்கபுரம்

20—3—55 இரவு, தோழர் என். வி. கன்னையன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் என். கே. நல்லவாண்டு, என். எம். மாணிக்கம், என். எஸ். கோவிந்தசாமி, பொன்ராமன், சின்னக்கண்ணு, என். கே. இராசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### தொளார்

20—3—55-ல், கண்டன ஊர்வலமும், பின்னர் கழக அலுவலகத்தில் கண்டனக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

### ஒட்டன்சத்திரம்

20—3—55 மாலை 6 மணி அளவில், வ. உ. சி. திடலில், தோழர் நல்லகுமார் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள்: தம்பிதுரை, நா. ரெங்கசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### குளித்தலை

21—3—55 மாலை 6-30 மணியளவுக்கு வ. உ. சி. சதுக்கத்தில் தோழர் கை. அங்கமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தி. வீ. முத்துகிருஷ்ணன், தி. வீ. பாலு, சி. பி. சிற்றரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### ஒண்டிப்புதூர்

23—3—55 மாலை 4 மணிக்கு, பாண்டியனார் படிப்பகத்தில் நடைபெற்ற கூட்டத்தில், கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### கும்மிடிபூண்டி

20—3—55 மாலை 5 மணிக்கு, தோழர் ப. செ. தூயமணி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஆ கிருஷ்ணன், இராதாமணாளன் ஆகியோர் பேசினர்

### செங்காட்டுப்பட்டி

21—3—55 இரவு 7½ மணிக்கு தோழர் மூ. குருசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வி. அருணாசலம், அரு ஆதிமூலம், கிருட்டிணசாமி, வரதராசன், மருதமுத்து, அன்பில் தருமலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### கவுந்தப்பாடி

20—3—55 மாலை 7 மணிக்கு, தோழர் சோமசுந்திரம் தலைமையில் நடைபெற்றது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### பம்பாய்

20—3—55 மாலை 6-30 மணிக்கு, தாராவி - வ. உ. சி. திடலில், தோழர் சி. த. மு. இர. ஆரிய சங்காரன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் புத்தரசு, த. மு. பொற்கோ, தனுக்கோடி, எஸ் வள்ளிநாயகம், யோ. தர்மராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

### முத்துப்பேட்டை

20—3—55ல், தோழர் ஆர். தெட்சிணாமூர்த்தி தலைமையில், தோழர் ந. தருமலிங்கம் கடையில் நடைபெற்றது. கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### சமயநல்லூர்

22—3—55ல், தோழர் பெ. தங்கச்சாமி தலைமையில் நடைபெற்றது. ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டிப்பதின் அவசியத்தையும், திராவிட நாடு பிரிய வேண்டியதின் அவசியம் பற்றியும், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், எஸ். முத்து, எஸ். அப்பாவு ஆகியோர். சொற்பொழிவாற்றினர்.

# பெல்ஜிய சர்க்கார் மீது கத்தோலிக்கர் 'படையெடுப்பு!'

**மத நிறுவனப் பள்ளிகளுக்கு மானியம் குறைந்ததே காரணமாம்**

பிரஸ்ஸல்ஸ், மார்ச் 28—

கிறித்துவ மத நிறுவனங்களில் நடத்தப்பட்டுவரும் பள்ளிக்கூடங்களுக்கான மானியத் தொகையில், பெல்ஜிய சர்க்கார் 50 கோடி பிராங்க் வெட்டு ஏற்படுத்தியிருக்கின்றனர்; இதுதவிர, கட்டிடங்களுக்கும் மானியச் செலவுகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. இதை எதிர்த்து இங்குள்ள கத்தோலிக்கக் கிறித்துவர்கள் 'பிரசல்ஸ் மீது படையெடுப்பு' தினத்தைக் கொண்டாடினார்களாம்.

ஒரு இடத்தில் மட்டுமே 20,000 பேர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர் என்றும், அந்த ஆர்ப்பாட்டத்தினரை போலீசார், குதிரை மீதேறிக் கொண்டு கலைத்தனர் என்றும், எச்சரிக்கையுடன் கூடிய முன்னேற்பாட்டினால் அவர்களில் 1,000-த்திற்கு மேற்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை அவர்கள் கைது செய்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

# தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.-வுக்கு போளூர் பஞ்சாயத்து சபை வரவேற்பு

தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ அவர்களுக்கு போளூர் நகர பஞ்சாயத்து சபையினர் 20—3—55 மாலை 4 மணியளவில் ஒரு நல்வரவேற்புத் தந்தனர்.

பஞ்சாயத்துச் சபையின் சார்பில் தேநீர் விருந்தொன்றும் நடைபெற்றது.

சபையின் சார்பில் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு மலர் மாலை சூட்டி, துணைத் தலைவர் தண்டாயுதபாணி அவர்கள் வரவேற்பிதழினை வாசித்தார்.

இதற்கு முன், உறுப்பினர்களெல்லோரும் தோழர் கோவிந்தசாமி அவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

நகரில் உள்ள முஸ்லிம் இனமக்கள், ஒரு பள்ளிக்கூடம் தேவை என்ற கோரிக்கை உள்பட பல கோரிக்கைகள் கொண்ட மனு ஒன்றை, ஜனாப் பட்டேல் அல்லா பக்ஷ் அவர்கள் முஸ்லிம் மக்கள் சார்பில், தோழர் கோவிந்தசாமி அவர்களுக்கு மாலை அணிவித்துத் தந்து, தங்கள் குறைகளைக்கூறி ஆவன செய்யுமாறு கேட்டுக் கொண்டனர்.

தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், தனக்குத் தரப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்தார்.

போளூர், மந்திரி மாணிக்கவேலரின் தொகுதியில் உள்ளடங்கியதென்றும், அங்குள்ள மக்கள் அவரிடம் தங்கள் குறைகளை எடுத்துக் கூறியும் இதுவரை பலன் காணாது போகவே தம்மிடம் மனு தந்திருப்பது பற்றியும், சட்டசபை நிகழ்ச்சிகள் குறித்தும், தான் எதிர்க்கட்சிக்காரராயிருந்தும் தனக்கு போளூர் பஞ்சாயத்து சபை வரவேற்புத் தந்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தும், தன்னிடம் தரப்பட்டுள்ள மனுக்கள் மீது, தன்னாலான எல்லா நடவடிக்கைகளையும் மேற்சொன்வதாயும் உறுதிமொழி தந்தும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இறுதியாக தோழர் போளூர் கே. சுப்பிரமணியம் அவர்கள் நன்றி கூற வரவேற்பு விழா இனிது முடிவுற்றது.

• • •

### படிப்பகத் திறப்பு விழா

20—3—55 மாலை 5 மணியளவில் போளூர் திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகச் சார்பில் கொடியேற்று விழாவும், படிப்பகத் திறப்பு விழாவும் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

# கழகச் செய்திகள்

★

### சேலம் — செல்லப்பன்பட்டியில் தி. மு. க. பொதுக்கூட்டம்

12—3—55 மாலை 6 மணிக்கு, தோழர் தாண்டவன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் 'தற்கால அரசியல் நிலைமையும், சமுதாய விழிப்பின் அவசியமும்' குறித்துப் பேசினார். கூட்டத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையாரிடம் கொடுக்கப்பட்ட ரூ. 1-ம் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு அன்பளிக்கப்பட்டது-நன்றி-பொறுப்பாளர்.

### தி.மு.க. பிரச்சார கூட்டம்

15—3—55ல், கும்மிடிபூண்டி தி. மு. க. சார்பில், கெட்னமல்லி என்னும் சிற்றூரில் ஓர் பிரச்சாரக் கூட்டம் திரு கோவிந்தராஜுலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இராதாமணாளன், ப. செ. தூயமணி, திருமாவளவன், ஆ. கிருஷ்ணன், ஏ சு. மணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

• • •

17—3—55 இரவு சின்னஓபுலாபுரத்தில், திரு. கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் அரங்கநாதன், ஆ. கிருஷ்ணன், சி. க. குழந்தை, இராதாமணாளன், கலைமணி, ப. செ. தூயமணி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### சேலம் மாவட்ட தி. மு. க.

சேலம் 'ரெஸ்ட் அவுஸில்' 23—3—55-ல், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், மாவட்டக் கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், முன்னாள் நிர்வாகிகளைப் பாராட்டி தோழர் இரா. தாண்டவன் சொற்பொழிவாற்றினார்.

### மதுரை நகர தி. மு. கழக ஊழியர்கள் கூட்டம்

20—3—55 காலை 10 மணியளவில் சுந்தரம் டாக்கீசில், தோழர் எஸ். முத்து தலைமையில் நடைபெற்ற மதுரை நகர திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்கள் கூட்டத்தில், தோழர் எஸ். முத்து அவர்கள், கூட்டத்தின் நோக்கம் பற்றிப் பேசியபின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கழக உறுப்பினர்கள் கடமை, மாநில மாநாடு ஆகியவை குறித்தும், தி. மு கழகக் கொள்கைகளுக்கும் மற்ற அரசியல் கட்சிகளின் கொள்கைகளுக்கும் உள்ள வேறுபாடு, சிறப்புகள் குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

### வடக்குமாங்குடியில் தோழர் ஈ. வெ. கி. சம்பத்

15—3—55 மாலை இவ்வூர் தி. மு. கழகச் சார்பில், தோழர் பி. பூராசாமி தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் கே. எஸ். சௌந்திரராசன், ஏ. கே. ஆனந்தன், என். கிட்டப்பா ஆகியோர் பேசியதும், தோழர் ஈ வெ. கி. சம்பத் அவர்கள் அரியதோர் சொற்பொழிவாற்றினார்.

### நீரமங்கலம் தி. மு. கழகத் துவக்க விழா

17—3—55 மாலை 5½ மணிக்கு, தோழர் கொ.ப சுப்பையா தலைமையில் நடைபெற்ற கழகத் துவக்க விழாவில், தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். எஸ். இளங்கோ, கிட்டு, கே. அடைக்கலம், ம. ரா. மணிமொழி, மா. சொ. வெகுருநாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில், ஐந்தாண்டுத் திட்டத்தைக் கண்டித்தும், மற்றும் சில தீர்மானங்களுடன் அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

# 'ஒரே மொழியாக இந்தியை சென்னை அரசாங்கம் ஏற்காது!'

'அகில இந்திய உத்தியோகப் பரீட்சைகளில் பிரதேச மொழிகளும் இடம் பெறும்'

## நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறுகிருர்

சென்னை, மார்ச் 28—

"அகில இந்திய உத்தியோகங்களுக்கான போட்டிப் பரீட்சைகளில் எழுதுவதற்கு இந்தி மொழியை மட்டும் ஒரே மொழியாகத் திணித்தால், அதனை சென்னை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாது,"

என்று, நிதிமந்திரி சுப்பிரமணியம், வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கல் மசோதா விவாதத்தின்போது சட்டசபையில் கூறியிருக்கிருர்.

எல்லாப் போட்டிப் பரீட்சைகளிலும், இந்தியும், பிரதேச மொழிகளும் இடம் பெற வேண்டும்—என்று, அகில இந்திய காங்கிரஸ் தீர்மானித்திருக்கிறது. என்றும், அத்தீர்மானம் பூரணமாக அமுலாக்கப்படும் என்பதில் தனக்கு சந்தேகமெதுவுமில்லை என்றும் கூறியிருக்கிருர்.

"இந்தப் பிரச்சினை பற்றிய நிலைமை பிரதமர் நேருவுக்கு நன்ருகத் தெரியும்; மேலும், தீர்மானத்தின்படி நடந்துகொள்ளுமாறு ஏற்கனவே கோரிக்கைகள் அனுப்பப்பட்டிருக்கின்றன," என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

### திருக்குறள் வகுப்பு

30—3—55 மாலை 6 மணிக்கு, சென்னை, புரசை, எண் 100, வெள்ளாழத் தெரு, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

### திருமணம்

30—3—55 அன்று, மாரண்டஅள்ளியில், தோழர் எம். எல். வெங்கடாசலம்–தோழியர் பார்வதி திருமணம், தோழர் பி. எம் குப்புசாமி தலைமையில் நடைபெறும். தோழர் ப.இராமலிங்கம் பேசுவார்

### வடக்கே வளர்ந்துள்ள...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிருர்கள்;

"தெருவில் ஓடும் இரண்டு கார்களில் எது முந்தும் என்பதற்குக்கூட பம்பாய் மக்கள் பந்தயம் கட்டி சூதாடுவார்கள்,"

என்று பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் தேபர் குறிப்பிட்டிருக்கிருர்.

"இந்த மனப் போக்கு, இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உதவாது," என்றும் அவர் கூறியிருக்கிருர்.

### எல்லாம் எங்கேயோ?

இரயில்வேக்களையெல்லாம் அபிவிருத்தி செய்வதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 1,000 கோடி செலவாகலாம் என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும், மேலும் 5000 மைல்களுள்ள புதிய இரயில் பாதைகளும் அமைக்கப்படுமென்றும், இரயில்வே அமைச்சர் லால் பகதூர் சாஸ்திரி கூறியிருக்கிருர்.

### மோரிஸ் தீவில் வகுப்புக் கலவரம்

மோரிஸ் தீவிலுள்ள செமின்—கிரனியர் எனும் கிராமம் ஒன்றில் இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்குமிடையே நடைபெற்ற கைகலப்பின் விளைவாகப் பலர் காயம்பட்டனர் என்று செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

கலவரத்தை அடக்கச் சென்ற போலீசாரிலும் இரண்டு பேருக்குப் பலத்த காயம் என்று கூறப்படுகிறது.

இந்துக்களின் உற்சவத்தைத் தொடர்ந்து கடந்த இரண்டு மாதகாலமாக அவ்விரு வகுப்பாரிடையே நிலவிவந்த மனத்தாங்கல்களும், குரோதமும் நேற்று இரவு அவர்களிடையே மோதலை உண்டுபண்ணியிருக்கின்றன. சுற்றுப்புற கிராமங்களில் இருந்த எல்லா துப்பாக்கிகளையும் போலீசார் கைப்பற்றியுள்ளனராம்.

[மோரிஸ் தீவு, இந்துமா சமுத்திரத்தில் உள்ள ஒரு பிரிட்டிஷ் காலனி ஆகும்.]

# ஏழை மாணவர்களுக்கு பகல் உணவு

## வரி விதித்தேனும் வழங்க காமராசர் ஆசை!

கல்விச் சீர்திருத்தம் பற்றி ஆசிரியர்களின் ஆலோசனை கேட்கப்படும் என்கிருர்

சென்னை, மார்ச் 28—

"எட்டாம் வகுப்புவரை கல்வி பயிலும் ஏழை மாணவர் எல்லோருக்கும் பகல் உணவு இலவசமாகத் தரவேண்டும் என்பதே எனது ஆசை;

"கிராம மக்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்பாதிருப்பதற்கு வறுமைதான் முக்கியமான காரணமாகும்;

"குழந்தைகளுக்கு இலவசமாகப் பகல் உணவு தந்தால் அனேகமாக எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கூடம் வருவார்கள்;

"அதுபற்றித்தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். எப்படியேனும் அதற்கான பணத்திற்கு வழிவகை செய்ய வேண்டும்; புது வரிகள் போட்டாவது—யார் கோபித்துக் கொண்டாலும்—பணம் திரட்டி, ஏழை மாணவர்களுக்குப் பகல் உணவு தர வேண்டும் என்பது என் விருப்பம்."

—என்று முதலமைச்சர் காமராசர், 27—3—55-ல், சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெற்ற சென்னை மாநில சர்க்கார் உதவி பெறும் ஆரம்பப்பள்ளி மானேஜர், ஆசிரிய மானேஜர் முதல் மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"பிள்ளைகளுக்குத் தரப்படும் கல்வி எத்தகையதாயிருக்க வேண்டுமென்பதில் வேறு யாரைக்காட்டிலும் ஆசிரியர்களாகிய உங்களுக்குத்தான் அதிகம் தெரியும். ஏனெனில் மாலையாகிவிட்டால் வீட்டில் குழந்தைகள் தூங்கிவிடுகின்றன; காலையில் எழுந்ததும் பள்ளிக்கு வருகின்றனர். காலை முதல் மாலைவரை ஆசிரியர்களாகிய உங்களிடம்தான் குழந்தைகள் வளர்கின்றன. அவர்களின் மனப்போக்கு உங்களுக்குத்தானே அதிகமாக — நன்ருகத் தெரிய முடியும்? ஆகவே உங்களைக் கலந்தாலோசிக்காமல், கல்வி விஷயத்தில் எந்த ஒரு மாற்றத்தையும் சர்க்கார், அவசரப்பட்டு கொண்டுவராது என்பதை உங்களுக்கு உறுதியாகக் கூறுகிறேன். எங்கிருந்துகொண்டோ யார் யாரோ கல்விப் பிரச்சினையைப் பற்றி முடிவு செய்கிருர்களே என்று எண்ணவேண்டாம். உங்கள் யோசனைகளை சர்க்கார் நிச்சயம் ஏற்றுக்கொள்ளும்.

மேலும், 'குழந்தைகளுக்கு தொழிற்கல்வி வேண்டும், இப்போதுள்ள கல்வி முறையில் மாற்றம் வேண்டும்' என்று நிரம்பப் படித்தவர்களும்கூடச் சொல்லுகிருர்கள். உண்மைதான். இனி உழைப்பிற்குத்தான் மதிப்புண்டு. ஆனல் 5 முதல் 10 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு அந்த 'உழைப்புடன்கூடிய கல்வி' தேவை இல்லை 5 வயதுக் குழந்தைகளால் உழைக்க முடியாது; உழைப்பு பற்றி, தொழில் பற்றி எதுவும் தெரிந்துகொள்ள முடியாது ஐந்து வயதிலேயே தொழிற் கல்வி தர நினைப்பது, குழந்தைகளை பிஞ்சிலேயே பழுக்கவைக்க நினைப்பதாகும். அது தீங்கானது.

ஆதாரக் கல்வி பற்றி வரவேற்புரையில் குறிப்பிட்டார்கள். ஆதாரக் கல்வி நல்ல முறைதான்; உயர்ந்தலட்சியம் கொண்டதுதான். ஆனல், அதுவும் 5 முதல் 10-வயதுவரை தேவை இல்லை ஒரு வேளை அல்லது குறிப்பிட்ட நேரம் படிப்பு போதுமென்ருல் அந்தச் சின்னஞ் சிருர்கள் ஆடி ஓடி விளையாடி மகிழட்டும்; அது போதும் அதை விடுத்து, அவர்களுக்கு தொழில் கற்றுத் தருவது என்பது வேண்டாத வீண்வேலை என்று காமராசர் கருத்துரை வழங்கியிருக்கிருர்.

# "சரித்திரத்தின் படிப்பினையை அலட்சியம் செய்வது கூடாது"

## "நாட்டின் முக்கியப் பிரச்சினையை 'மூடுமந்திர'மாக நடத்திவைப்பதா"

எல்லை காந்தி அப்துல் கபார்கான் எச்சரிக்கை

லாகூர், மார்ச் 28—

மேற்கு பாகிஸ்தானை ஒரே உறுப்பாக்குவதற்கு பாகிஸ்தான் சர்க்கார் தயாரித்திருக்கின்ற திட்டத்தைத் தாம் எதிர்ப்பதாகவும், இத்தகைய ஒரு ஏற்பாட்டிற்கு மக்களின் உற்சாகமான — ஒருமித்த ஆதரவு தேவையாயிருக்க, பொது மக்களைக் கலந்தாலோசிக்காமலேயே இதைச் செய்யக் கூடாதென்றும் எல்லைகாந்தி கான் அப்துல் கபார்கான் தெரிவித்திருக்கிருர்.

மேலும் அவர் கூறினர்:—

"அமைச்சர்களும் அதிகாரிகளும் மட்டும் கூடி முடிவு செய்து 'மூடுமந்திர'மாக நடத்திவைக்கக் கூடிய ஒரு பிரசசினையாக இது இருக்கக் கூடாது; இது விரிவான விளைவுகளுடன் கூடிய ஒரு 'தேசியப் பிரச்சினை' ஆகும்; எவ்விதமான ஒறுக்கீடு அல்லது நிர்ப்பந்தமுமில்லாமல் இப்பிரச்சினையில் நமது கருத்தைத் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும்."

மேலும் அவர் சொன்னர்:—

"தெலுங்கு மொழி பேசுபவர்களைத் திருப்தி செய்விக்க, சென்னை மாநிலத்திலிருந்து ஆந்திரப் பகுதியை பிரிக்கவேண்டியதாயிற்று; சரித்திரத்தின் இந்தப் படிப்பினையை அலட்சியம் செய்துவிடக் கூடாது"

### கைத்தறி அபிவிருத்தி

மத்திய அரசாங்கத்தின் உதவி

"இவ்வாண்டில் (1955—56), கைத்தறித் தொழில் அபிவிருத்திக்கென பல்வேறு திட்டங்களையும் அமுல் நடத்த இந்திய சர்க்கார் ரூ. 5 கோடி தருவர்,"

என்று, அகில இந்திய கைத்தறிக் குழுவின் தலைவரான வி. நஞ்சப்பா, பம்பாயில் கூறியிருக்கிருர்.

இதற்கென இந்திய சர்க்கார் அனுமதித்துள்ள ரூ. 6½ கோடியில், இதுவரை கொடுத்ததுபோக, இன்னும் ரூ. 4 கோடி இருப்பதாகவும், அதையும் சேர்த்துக்கொண்டால் 1955—56-ம் ஆண்டில் கைத்தறி அபிவிருத்தித் திட்டங்களுக்கு, எல்லா மாநிலங்களுக்குமாக கிட்டத்தட்ட ரூ. 9 கோடி கிடைக்கும் என்றும் அவர் கூறியிருக்கிருர்.

இதுவரையிலும் கைத்தறிக்காக மத்திய சர்க்கார் அனுமதித்துள்ள ரூ. 6½ கோடியில், இத்திங்கள் முடிய ரூ. 2¾ கோடிதான் செலவிடப்பட்டிருக்கிறதாம்.

"கைநெசவுத் தொழிலில் சமாளிக்க வேண்டிய முக்கியமான பிரச்சினை விற்பனை வசதிகள் இல்லாமையேயாகும். அடுத்த ஆண்டில் குறைந்தபட்சம் நாடு முழுவதிலுமாக 3,000 டிப்போக்கள் திறக்கப்படுமென்றும், தற்போது இந்தியா முழுமையிலும் 750 'டிப்போ'க்கள்தானிருக்கின்றன என்றும் அவர் மேலும் கூறினர்.

### நல்ல நடவடிக்கை!

சென்னை, மார்ச் 28—

நடன நாடகங்களல்லாத மற்றுள்ள எல்லா நாடக நிகழ்ச்சிகளுக்கும் அளிக்கப்பட்டிருந்த தமாஷா வரி விலக்கை இவ்வாண்டு ஏப்ரல் திங்கள் முதல் தேதியிலிருந்து மேலும் ஓராண்டுக்கு நீடிப்பது என்று சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

சமூக க்ஷேமால போர்டு, இதுவரை சுமார் 3,500 கிராமங்களில் வாழும் மொத்தம் சுமார் 37 லட்சம் மக்களுக்குப் பயன்படும் 181 க்ஷேமால விஸ்தரிப்புத் திட்ட நிலையங்களை ஆரம்பித்து வைத்திருக்கிறது.

# அந்தப்புர இரகசியங்களா?

## ஐதராபாத் அரண்மனையில் அடிமைப் பெண்கள்

உடலும் உயிரும் நிசாமின் ஏகபோக உரிமையாம்!

புலன் விசாரணை செய்ய நீதிமன்றம் உத்தரவு

வயதுவந்த 300 இள மங்கையரும், வயதுவந்த 100 ஆடவரும், இன்னும் எண்ணிக்கையிலடங்காத மைனர் பெண்களும், சிறுவர்களும் நிசாம் 'ராஜ பவன'த்தில் அடிமைகளாக வைத்துக் கோள்ளப்பட்டிருப்பவர்களாகவும், அவர்களது உடல், உயிர்மீது நிசாம் 'ஏகபோக ஆதிக்கம்' செலுத்துவதாகவும் கூறப்பட்டுள்ளது

சென்ற ஆண்டு ஏப்ரல் திங்கள் 27-ந் தேதியன்று, ஐதராபாத் நகரில் உள்ள ஒரு வழக்கறிஞரான பி. ஜி. கேஸ்கர் என்பவர், கி. பு கோ. 190 (1) 'சி' பிரிவின் கீழும், இ. பி. கோ. 346, 370 ஆகிய பிரிவுகளின் கீழும், ஜில்லா மாஜிஸ்திரேட் முன்னர் புகார் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்தப் புகாரில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் பற்றிய புலன் விசாரணை மேற்கொள்ள போலீஸ் கமிஷனருக்கு உத்தரவிடப்பட்டதாம். ஆனல், போலீஸ் கமிஷனர், இந்திய அரசியல் சட்டத்தில் நிசாம் மன்னருக்குப் பாதுகாப்புத்தரும் பிரிவைச் சுட்டிக்காட்ட, மாஜிஸ்திரேட் அம்மனுவை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பியிருக்கிருர். உயர் நீதிமன்ற நீதிபதிகள் இருதரப்பு வாதங்களையும் கேட்டு, 'புகார் பற்றிய விசாரணைகளை நடத்த வேண்டும்,' என்பதை நிராகரித்திருக்

கின்றனர். இது கடந்த ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சியாகும்.

பின்னர் மீண்டும் இப்புகார், தற்போது, நகர மாஜிஸ்திரேட்டின் விசாரணைக்கு வந்துள்ளது.

இராஜப் பிரமுகருக்கு (நிசாம்) விரோதமான தகவல்கள் இருந்தாலும், இவ்விஷயம் பற்றி புலன் விசாரிக்க உத்தரவிட நீதி மன்றத்திற்கு அதிகாரம் உண்டென்று குறிப்பிட்டு, மாஜிஸ்திரேட் உத்தரவிட்டிருக்கிருர்.

மேலும் அவர் தமது உத்தரவில், புலன் விசாரணை பற்றிய அறிக்கை கிடைத்ததும் சம்பந்தப்பட்டவர் மீது நீதிமன்றம் வழக்கு தொடருமா, தொடராதா என்பது வேறு பிரச்சினை என்றும் ஆனல், புலன் விசாரணை பற்றிய அறிக்கையைப் படித்த பிறகு தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு மாஜிஸ்திரேட்டுக்கு அதிகாரம் உண்டு என்றும் குறிப்பிட்டிருக்கிருர்.

### பொருளாதாரம்— புதிய சித்தாந்தம்

கொழும்பு, மார்ச் 28—

ஆசிய— ஆப்பிரிக்க நாடுகளின் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக, பாண்டுங்கில் நடைபெறவிருக்கும் ஆசிய — ஆப்பிரிக்க மாநாட்டில், 'புதிய பொருளாதார சித்தாந்தம்' ஒன்றை, இந்தியப் பிரதமர் நேரு தாக்கல் செய்வாராம்.

ஆசியா, ஆப்பிரிக்காவின் பெரும்பான்மை மக்களான விவசாயிகளின் நிலைமையைச் சீரமைப்பதும், 'சுதந்திர நாடுகள்' என்ற முறையில் தங்கள் அந்தஸ்தையும், பொறுப்பையும் அந்நாடுகளுக்கு உணர்த்துவதும் இந்த 'சித்தாந்தத்'தின் நோக்கங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

### உலகிலேயே மிகப் பெரிய கோழி முட்டை!

கொல்லத்திலுள்ள ஒருவரது கோழிப் பண்ணையில், 'மினூர்கா' எனும் ஜாதியைச் சேர்ந்த கோழி ஒன்று 5 அவுன்ஸ், 30 கிராம் எடையுள்ள ஒரு முட்டையிட்டிருக்கிறது. உலகிலேயே இதுதான் 'மிகப் பெரிய' கோழி முட்டை என்று கூறப்படுகிறது.

1954-ம் ஆண்டு இறுதியில் சாய உற்பத்தித் தொழிலில், இந்திய மூலதனத்தை மட்டும் கொண்டு நடத்தப்பட்டுவந்த உற்பத்தி ஸ்தாபனங்கள் யாவும் சேர்ந்து மொத்தம் சுமார் 11,87,000 பவுண்டு சாயப் பொருள்களை உற்பத்தி செய்ய வல்லவையாக இருந்தன.

### திருக்குறள் மாநாடு

"வடாற்காடு மாவட்ட திருக்குறள் மாநாட்டை ஏப்ரல் இரண்டாவது வாரத்தில் 16, 17 ஆகிய தேதிகளில், அறிஞர் பெருமக்களின் சிறப்புச் சொற்பொழிவுகளுடன் நடத்த ஏற்பாடாகியிருக்கிறது. திருக்குறள் மாநாட்டிற்கு தீர்மானங்கள், நன்கொடை, ஆலோசனைகள் ஆகியவற்றை அனுப்புபவர்கள் 12—4—55-க்கு முன்பாக கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்."

முகவரி: ஆ. மணிஎழிலன், வடாற்காடு மாவட்ட திருக்குறள் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர், வேலூர் (வ. ஆ.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணுதுரை, எம்.ஏ.